**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
ஆணை எண்.196/மா/2024
நாள் 10.12.2024

திரு.வி.சுதாகர், தஞ்சாவூர். ......... மனுதாரர்

ஆணையர்,
தஞ்சாவூர் மாநகராட்சி. ......... எதிர்மனுதாரர்

தஞ்சாவூர், மருத்துவக்கல்லூரி சாலை, சுந்தரம் நகர் விரிவாக்கம், திருப்பதி நகர், மனை எண்.63 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.வி.சுதாகர் என்பவரின் 14.07.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 15.07.2024–ல் பெறப்பட்டு 196/மா/2024 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

தஞ்சாவூர், மருத்துவக்கல்லூரி சாலை, சுந்தரம் நகர் விரிவாக்கம், திருப்பதி நகர், மனை எண்.63 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.வி.சுதாகர் என்பவர் தனது 14.07.2024 நாளிட்ட மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

“தஞ்சாவூர் மாநகராட்சியில் 2012 முதல் பதிவு பெற்ற ஒப்பந்ததாரராக பணிபுரிந்து வருகிறேன். என்னால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு ஒப்பந்தப்பணிகளுக்கான பட்டியல் தொகை வழங்கும் பொழுது பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட டெண்டர் கூடுதல் முன்வைப்புத்தொகை மற்றும் செயல் திறன் பாதுகாப்பு தொகையான ரூ15.00 இலட்சத்தை திரும்ப வழங்க கோரி 17.08.2023–ல் 33 மனுக்களும், 12.10.2023 அன்று 14 மனுக்களும் நேரில் அளிக்கப்பட்டு 11 மாதங்கள் கடந்த நிலையில் தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையரை நேரில் தொடர்பு கொண்ட போது 40–க்கும் மேற்பட்ட பணி செய்தது தொடர்பான கோப்புகள் காணவில்லை என்றும், என்னிடம் பிடித்தம் செய்யப்பட்ட தொகைகள் பதிவேடுகளில் பதிவு செய்யப்படவில்லை என்றும் கூறிய தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையர் இது சம்பந்தமாக எந்த ஒரு அலுவலர் மீதும் துறை ரீதியான நடவடிக்கை எடுக்காமலும், காவல் துறையில் புகார் ஏதும் கொடுக்காமலும், உயர்அதிகாரிகளுக்கு இது குறித்து எந்த ஒரு தகவலும் அளிக்காமலும் ஊழல் செய்த அலுவலக நபர்களை காப்பாற்றும் எண்ணத்துடன் 2018–2019, 2019–2020, 2020–2021 வைப்புத் தொகை பதிவேடுகளில் பதியப்படாத காரணத்தினாலும், நான் மாமன்ற அனுமதி பெற்று 4 பணிகளுக்கான வைப்பு தொகையினை 2024–2025 ஆம் ஆண்டு வைப்புத்தொகை பதிவேட்டில் பதிந்து திரும்ப வழங்க முன் வந்திருப்பது தவறான செயலாகும். மீதமுள்ள 43 மனுக்களுக்கான வைப்புத்தொகை ரூ.14.00 இலட்சத்தை நான் கேட்டபோது கோப்புகள் காணப்படாததாலும், வைப்புத்தொகை பதிவேட்டில் பதியப்படாத காரணத்தினாலும்,

மேலும் நான் பணி செய்த தொகை ரூ.80,000/-த்தை வழங்க நடவடிக்கை எடுக்காததன் காரணத்தை இம்முறைமன்ற நடுவர் விசாரித்து எனக்கு சேர வேண்டிய அனைத்து தொகையையும் உடனடியாக கிடைக்க நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை வழங்க கோரி தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவ 21.08.2024 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டது.

3) தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையர், தனது 27.09.2024 நாளிட்ட கடிதத்தில் மனுதாரர் செய்த பணிகள் முடிவுற்ற வகையில் 4 பணிகளுக்கான முன் வைப்புத்தொகை 5% கீழ்கண்டவாறு அன்னாருக்கு வழங்கப்பட்டது.

| வரிசை எண். | வவுச்சர் எண்/வழங்கப்பட்ட நாள் | தொகை ரூ |
|---|---|---|
| 1) | BPV /107/24-25-RF/0000484 நாள் 02.08.2024 | 42,000/- |
| 2) | BPV /107/24-25-RF/0000485 நாள் 02.08.2024 | 3,000/- |
| 3) | BPV /107/24-25-RF/0000482 நாள் 13.08.2024 | 30,000/- |
| 4) | BPV /107/24-25-RF/0000483 நாள் 13.08.2024 | 29,949/- |
| | கூடுதல் | 1,04,949/- |

அன்னாரால் தெரிவிக்கப்பட்ட மீதம் உள்ள 52 பணிகளுக்கான வைப்புத்தொகை வழங்குவதற்கு 52 கோப்புகள் கணக்கர் பிரிவில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி வைப்புத்தொகை காலம் கடந்த பதிவு என்பதால் பதிவேடுகள் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது என்ற விபரம் கணக்கர் பிரிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், அன்னாரால் தெரிவிக்கப்பட்டுள்ள முன் வைப்புத்தொகை ரூ.80,000/-த்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என தெரிவித்துள்ளார்.

3) முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் இம்முறைமன்ற நடுவ 29.10.2024 நாளிட்ட அழைப்பாணைகள் மூலம் 19.11.2024 அன்று நேரடி விசாரணைக்கு அழைக்கப்பட்டனர்.

தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையர் தனது 18.11.2024 நாளிட்ட அறிக்கையில் 55 பணிகள் மனுதாரர் மேற்கொண்டது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கையை கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

| | | |
|---|---|---|
| i) | வைப்புத் தொகை | ரூ. 2,39,195/- |
| ii) | வழங்கப்பட வேண்டிய வைப்புத் தொகை | ரூ.14,30,668/- |
| iii) | கூடுதல் தொகை | ரூ.16,69,803/- |
| iv) | வழங்கப்பட்ட வைப்புத்தொகை | ரூ.9,59,356/- |

மேற்குறிப்பிட்டுள்ள கூடுதல் தொகையான ரூ.16,69,803/– திரு.வி.சுதாகர், ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட வேண்டும். அன்னாருக்கு ரூ.9,59,356/– மட்டும் இது நாள் வரை வழங்கப்பட்டு உள்ளது. மீதமுள்ள வைப்புத்தொகை ரூ.7,10,447/– திரு.வி.சுதாகர் ஒப்பந்ததாரருக்கு வழங்க நடவடிக்கையில் உள்ளது. மேலும் அன்னார் மேற்கொண்ட பணியில் வித்தியாச தொகை ரூ.81,190/– 21.10.2024–ல் அன்னாருக்கு வழங்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

மனுதாரர் திரு.வி.சுதாகர் அவர்களது 27.06.2022 நாளிட்ட மனு தொடர்பாக இம்முறைமன்ற நடுவத்தால் ஆணை எண்.101/மா/2022 நாள் 15.09.2022 வெளியிடப்பட்டது. மேலும் அதனைத் தொடர்ந்து மனுதாரர் திரு.வி.சுதாகரால் இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பப்பட்ட அனைத்து மனுக்களின் மீதும் தகுந்த நடவடிக்கை இம்முறைமன்ற நடுவத்தால் எடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் திரு.வி.சுதாகர் அவர்களின் 14.07.2024 நாளிட்ட மனுவினை பரிசீலிக்கையில் இப்பொருள் தொடர்புடைய வழக்கு எண். W.P.No.27670/2022 மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற மதுரைகிளையில் நிலுவையில் உள்ளதை அறிய முடிகிறது.

இம்மாதிரியான நிகழ்வுகளில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ சட்டம் 2014–ல் பிரிவு 10 (3) (b)–ல் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

10 (3) The Ombudsman shall not enquire into matters relating to:-

(a) xxx

(b) any matter in respect of which an enquiry has been ordered under the commission of inquiries Act, 1952 or any matter Pending before a Court.

எனவே மேற்கண்ட சட்ட பிரிவில் தெரிவித்துள்ளபடி நீதிமன்றம் ஒன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரிக்கலாகாது என்பதால், இப்பொருள் தொடர்பான மேல் நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2024–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 10–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணைவெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு வி. சுதாகர்,
மனை எண்.63, திருப்பதி நகர்,
சுந்தரம் நகர் விரிவாக்கம்,
மருத்துவ கல்லூரி சாலை,
தஞ்சாவூர்–613 004.

2) ஆணையர்,
தஞ்சாவூர் மாநகராட்சி,
காந்தி சாலை,
தஞ்சாவூர்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண். 75 சாந்தோம் நெடுஞ்சாலை
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028

4) ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

<u>நகல்</u>:
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ.கோ. / உதிரி

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

சட்ட ஆலோசகர்/செயலாளர் (FAC).